# தமிழ் இலக்கிய வரலாற்றில் பெண் புலவர் எண்ணிக்கை அருகியமைக்கான பண்பாட்டுக் காரணிகள்

*ம. மோகன்*
ஆய்வாளர், கௌரவ விரிவுரையாளர்
இந்திர காந்தி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பாண்டிச்சேரி

மலர்: 4
இதழ்: 2
மாதம்: அக்டோபர்
வருடம்: 2019
ISSN: 2454-3993

## முன்னுரை

*சங்க காலத்தில் தொகுக்கப்பட்ட பாடல்களை எழுதியோரில் ஏறத்தாழ பத்து சதவிகிதம் பேர் பெண்கள். ஆனால் அடுத்த பத்து நூற்றாண்டுகளில் சைவத்துக்குக் காரைக்கால் அம்மையும் வைணவத்துக்கு ஆண்டாளுமென இரண்டு பெண் ஆளுமைகளை மட்டுமே நம்மால் கண்டுகொள்ள முடிகிறது. சங்க காலத்தில் ஔவை அரசவையில் முதன்மை நிலையில் இருக்கிறார்.ஆனால் பிற்காலத்தில் காரைக்கால் அம்மையார் எல்லாருக்கும் மூத்த நாயன்மாராக இருந்தபோதும்கூட பதினோராம் திருமுறையில் பன்னிரண்டு பேரில் ஒருவராகச் சேர்க்கப்பட்டிருக்கிறார். ஆண்டாள் என்றொரு பெண் கவியே இல்லை என்று சிலர் மறுக்குமளவிற்கு ஆண்டாளின் நிலைமை இருந்திருக்கிறது. காலப்போக்கில் பெண்களின் புலமை வரலாறு இவ்வாறு தலைகீழாக மாறிப்போனதன் பண்பாட்டுக் காரணிகளை இக்கட்டுரை அலசுகிறது.*

## பெண்கவிகளின் தொல்கவிதை நாட்டுப்புற இலக்கியங்களே

பெண்கவிகளுடைய வரலாற்றைத் தொகுத்துக்கொள்ள வேண்டுமானால் முதன்முதலில் கணக்கில் கொள்ளப்பட வேண்டியது நாட்டுப்புறப்பாடல்கள்தான். பாடியவர் இன்னாரென்று தெரியாதபோதும் செவ்வியல் இலக்கியங்களைவிட மிகுந்த பழமைவாய்ந்த இலக்கிய மரபைக் கொண்டவையாக நாட்டுப்புறப் பாடல்கள் திகழ்கின்றன. மிகத் தேர்ந்த கலைவடிவங்களாக மிகப் பிற்காலத்தில் உருவான கலை வடிவங்களைத் தவிர்த்து ஆதிகாலம் முதலே தொடரும் இலக்கிய வடிவங்களாக இருக்கிற - பிறப்பு முதலாக இறப்பு வரையிலாகப் பாடப்படுகிற தாலாட்டு, ஒப்பாரி முதலானவை போல - மனித வாழ்வியலோடு பின்னிப் பிணைந்த பாடல் வடிவங்களில் பெரும்பாலானவை பெண்களால் நிகழ்த்தப்படுபவையாகவே இருக்கின்றன. இவற்றைக் கணக்கில் கொள்ளும்போதுதான் பெண்களின் புலமை வரலாற்றின் தொன்மையை சரியாகப் புரிந்துகொள்ள முடியும்.

**பெண்கவிகளின் தொல்பழங்காலப் புலமை வரலாறு**

மிகப் பழமையான வரலாறுகளைக் கொண்ட மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்றாக இருக்கிறது. ஏறக்குறைய இரண்டாயிரத்திற்கும் மேலான ஆண்டு காலப் பழமை வாய்ந்த இலக்கியங்களைக் கொண்ட மொழியாகத் தமிழ் விளங்குகிறது. இந்தப் புலமைப் பங்களிப்பின் ஆதிகாலம் முதலே பெண்களின் பங்களிப்பும் தவிர்க்கமுடியாத ஆளுமைப் பண்புடன் இருந்து வந்திருக்கிறது. கிரேக்கத்தில் ஸாப்போவையும் தமிழில் ஔவையையும் ஆதிகாலப் பெண்கவிகளின் புலமைக்கும் தனித்துவத்திற்கும் உதாரணமாகச் சொல்லலாம். நம்முடைய ஆதிகால வரலாற்றில் ஐம்பதுக்கும் குறைவான பெண்கவிகள் மட்டுமே தொகுப்பு நூல்களின்மூலமாக அறியப்பட்டவர்களாக இருக்கின்றனர். சங்க இலக்கியத்தில் குறைவான எண்ணிக்கையில் மட்டுமே பெண்கவிகள் இடம்பெற்றதைக் கணக்கில் கொண்டு அவ்வளவு குறைவானவர்களே அக்காலத்தில் எழுதினார்கள் என்று முடிவுக்கு வருவது ஆரோக்கியமான முடிவாக இருக்காது. ஏனெனில் ஆண் புலவர்கள் எல்லோரையும் விஞ்சக்கூடிய திறமை மிகுந்த ஔவை முதலான பெண் கவிகள் அரசவையில் முதன்மை வகித்த காலமொன்றில் மிகக் குறைவான பெண் கவிகளே கவிதை எழுதினார்கள் என்று முடிவுக்கு வருவது பொருந்துவதாக இல்லை. மேலும் எழுதப்பட்ட காலம் ஒன்றாகவும் தொகுக்கப்பட்ட காலம் ஒன்றாகவும் இருக்கிற சங்கத் தொகை நூல்களின் தொகுப்புச் செயல்பாடு மற்றும் தொகுக்கப்பட்ட காலத்தின் அரசியல் மற்றும் பண்பாட்டுச் சூழல், மேலும் தொகுத்தவரின் தேவை மற்றும் தேர்வு சார்ந்த உள்நோக்கம் ஆகிய எல்லாவற்றையும் கணக்கில்கொள்ளும் போதுதான் சங்க இலக்கியத்தில் பெண்கவிகள் மிகக்குறைவாக இடம் பெற்றதின் காரணத்தைப் புரிந்து கொள்ள முடியும்.

**சங்க இலக்கியக் காலத்தின் பண்பாட்டு அரசியல் நிலைமை**

சங்க காலம் என்பது குறிப்பிட்ட ஒரு பண்பாட்டுத் தேவையை வலியுறுத்துவதற்கான இலக்கியங்களைப் படைத்த காலமாக இருந்திருக்கிறது. அத்தகைய பண்பாட்டுத் தேவையின் ஒடுக்குமுறைக்கூறுகளை வெளிப்படுத்துவனவாகவும் கலகக் குரல்களைக் கொண்டனவாகவும் வெளிப்பட்ட மாற்று அரசியல் பண்புகொண்ட பாடல்களும் அக்காலத்திலேயே எழுதப்பட்டிருக்கின்றன. அத்தகைய மாற்று அரசியல் பாடல்கள் திணை துறை வகுத்து உரையெழுதப் பட்டதன்மூலம் அந்தக் குறிப்பிட்ட பண்பாட்டுத் தேவையின் மைய நீரோட்டத்தோடு இயைந்த பொருள்கொள்ளும் பாடல்களாக வாசிக்கப்படுகின்றன.

தொல்காப்பிய அக இலக்கணச் சூத்திரங்கள், குடும்பம் என்னும் அமைப்புக் கட்டுமானம் குறித்தே பெரும்பான்மையும் பேசுகின்றன. இத்தகைய குடும்பத்தின் அமைப்புருவாக்க வரலாறு குறித்து ஆராயும் ஏங்கல்ஸ் ஏடறிந்த வரலாற்றுக்கு முந்தைய காலங்களான காட்டுமிராண்டி நிலை, அநாகரிக நிலை ஆகிய நெடிய காலப் பகுதிகளைக் கடந்தே குடும்பம் என்னும் அமைப்பு உருவாயிற்று என்கிறார். மேலும் குடும்பம் என்னும் அமைப்பு உயிர்வாழ்வதற்கான மூலாதாரங்களின் பெருக்கத்தை வைத்தே பரிணாம வளர்ச்சியடைந் வடிவமுழுமையடைந்ததையும் அவர் தெளிவுபடுத்துகிறார். ஆதிகாலங்களில் ஆண்கள் பலதார மணத்தையும் பெண்கள் பல கணவர் மணத்தையும் கடைபிடித்து வாழ்ந்துவந்துள்ளனர். மக்கள் தங்களுடைய ரத்த உறவுகளுக்கு உள்ளேயும் வெளியேயும்

பலமுனைத் தன்மைகொண்ட பாலுறவைப் பேணி வந்த காலமாக அது இருந்துள்ளது. வேட்டையாடிப் பிழைத்த அக்காலங்களில் தனியுடைமை என்னும் கருத்தாக்கம் உருவாகாததால் வாரிசுரிமை அவசியமில்லாத காலகட்டமாக அவை இருந்திருக்கின்றன. பெண்கள்தங்கள்பாலுறவுக்கானஇணையைத் தேர்வு செய்யும் உரிமையுடையோராய் இருந்திருக்கின்றனர்.

மேலும் தமது இணை உறவை ரத்து செய்யும் உரிமையும் அவர்களுக்கு இருந்திருக்கிறது. குழந்தைகளின் மீதான உரிமை தந்தைக்கானதாக அன்றி தாய்க்கே இருந்திருக்கிறது. இணை மணஉறவுக் காலங்களில் தான் குழந்தைக்கா ஒற்றைத் தந்தை என்றொருவர் அடையாளம் காணப்படுகிறார். இத்தகையபரிணாமஉருவாக்கத்தில்பாலுறவுச் செயல்பாடுகள் கட்டுப்படுத்தப்படுதலின் வெற்றியே குடும்பம் என்னும் அமைப்புக் கட்டுமானத்தி அஸ்திவாரமாக இருக்கிறது. கட்டுப்பாடற்ற பாலுறவுச் செயல்பாடுகள் படிப்படியாக நெறிப்படுத்தப்பட்டதன் விளைவாக ஒரு பெண் ஓர் ஆணோடு மட்டுமே உறவுகொள்ளவேண்டுமென்கிற நிலை உருவாகிறது.

அலைந்து திரியும் வேட்டை வாழ்க்கையிலிருந்து நிலைத்து வாழத் தொடங்கிய விவசாய வாழ்க்கைக் காலங்களில் வாழ்க்கை நிலையோடு சேர்த்துக் கருத்தாக்கங்களும் மாற்றம் பெறுகின்றன. சொத்து, செல்வம் முதலான உடைமைகள் தனியுடைமைக் கருத்தாக்கத்துக்கு வித்திட்டபோது வாரிசுரிமைக்கான முன்னேற்பாடுகளும் நடந்தேறுகின்றன. இத்தகைய செயல்பாடு களின் தொடர்ச்சியாகவே ஒரு பெண் ஒரு கணவரை மட்டுமே மணக்கும் ஒருகணவர் மணமுறை நடைமுறைக்கு வருகிறது. இக்காலத்தில் பெண் தனது உரிமை மற்றும் தலைமைக்கான சாத்தியங்களை இழந்து தந்தைத் தலைமைக் குடும்பத்திற்குத் தக வமைக்கப் படுகிறாள். இதுகுறித்துக் கூறும் ஏங்கல்ஸ் இத்தகைய ஒருகணவர் மணமுறை ஆணுக்கும் பெண்ணுக்குமான சமரசமாக அன்றி ஒரு பால் மற்றொரு பாலை அடிமைப் படுத்தும் செயல்பாடாகவே உருவாகிறது என்கிறார் **(1990:47-136).** பெண் இருப்புக்கான நில கால எல்லைகள் வரையறுக்கப் பட்ட இத்தகைய தந்தைத் தலைமையை அடிப்படையாகக்கொண்ட ஒருகணவர் மணமுறை உருவாக்கத்திலிருந்த காலமாகத்தான் தொல்காப்பியர் காலமும் அதன் தொடர்ச்சியான சங்க இலக்கியக் காலமும் இருந்திருக்கவேண்டும். ஆண் தலைமைச் சமூகம் ஆரம்பித்த காலமும் அல்லாத அது முழுமை பெற்ற காலமும் அல்லாத இடைக்காலம் இது. இக்காலத்தில் தொல்காப்பியம் என்கிற பொருளிலக்கண உருவாக்கத் தேவை என்பது இத்தகைய ஆண் தலைமைக் கருத்துருவாக்கதை மொழிரீதியாக வலிமைப்படுத்தும் செயல்பாடுதான்.

### சங்க காலத்திற்குப் பிறகு பெண் புலவர் அருகியமைக்குக் காரணங்கள்

நமது பண்டை இலக்கியங்களின் காலம் அகவாழ்வென்னும் பெயரில் காதலைக் கொண்டாடிய காலமாகக் கணிக்கப்படுகிறதென்றபோதும் அது காதலுக்கு எதிரான திசையில் பயணிக்கிற காலமாகவே இருந்திருக்கிறது. சங்க காலத்திற்கும் முந்தைய ஆதித் தமிழ்நிலத்தில் தொல்காப்பியர் களவெனக் குறிப்பிடும் காதல் மணமுறையே வழக்கத்தில் இருந்திருக்கிறது. இத்தகைய மணமுறை தலைவன் மற்றும் தலைவி இருவரின் தேர்வு மட்டுமே சார்ந்தது. இதில் சாதி - வர்க்கம் என்னும் எத்தகைய சமூகப் பாகுபாடுகளின் தலையீடும் இல்லை. தொல்காப்பியர் இத்தகைய மணமுறையின் இறுதிக்

கட்டமாக நெறிப்படுத்தப்பட்ட திருமணம் கட்டாயப்படுத்தப்பட்ட காலத்தைப் பொய்யும் வழுவும் தோன்றிய காலம் எனக் குறிப்பிடுகிறார். இதில் பொய் என்பது அகநிலைப்பட்டது. தலைவனுக்கும் தலைவிக்கும் உரியது. வழு என்பது புறநிலைப்பட்டது. படிநிலைச் சமூக அமைப்பின் ஒழுக்க விதிகளினின்றும் தவறுவது. மேலும் காதலென்பது உள்ளத்து வேட்கையினின்றும் உருவாவது என்னும் நிலைக்கு மாறாக ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்பதே களவு என்பதாக வரையறுப்பார் தொல்காப்பியர். அதற்கு உரை வகுக்கும் இளம்பூரணர் ஒத்த என்பதாவது குலம், குடிச் சிறப்பு, ஆட்சியதிகாரம் முதலான பத்து குணங்களால் ஒத்திருத்தலென்பார்.

தொல்காப்பியர் வரையறுக்கிறபடி கற்பென்பது திருமணமன்றி வேறில்லை. "கற்பெனப்படுவது கரணமொடு புணரக் கொளற்குரி மரபின் கிழவோன் கிழத் தியைக் கொளற்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே" என்பார் அவர். இதற்கு உரை வகுக்கும் இளம்பூரணர் "களவின்கண் ஒத்தாரிருவர் வேட்கை மிகுதியாற்கூடி ஒழுகிய வழிக் கரணத்தின் அமையாது இல்லறம் நடத்தலாமோ எனின் அஃதாகா தென்றற்குக் கரணமொடு புணர" என்றார் *(1983:1)* என்பார். தொல்காப்பியர் கொளற்குரி மரபு கொடைக்குரி மரபு என்று சொல்வனவற்றைக் குலம் என்றே கணிக்கிறார் இளம்பூரணர். மேலும் கற்பெனப்படுவது உயர் குடிகளுக்கானதாகவே இருந்துவந்துள்ளதையும் பிற்காலத்திலேயே அது மற்ற குலத்தாருக்கும் ஆனதையும் தொல்காப்பியர் சுட்டிக் காட்டுகிறார். காதலினடியாகப் பிறக்கும் இணையைத் தேர்வு செய்யும் சுதந்திரம் என்பது கட்டுப்படுத்தப்பட்டு களவுக்கு சாதி, வர்க்கம் முதலான சமூகக் காரணிகள் துணைநிற்க வலியுறுத்தி, களவு கொண்டபோதும் பெரியோர் கொடுக்கல் வாங்கலுக்கான பண்டமாகப் பெண் மாற்றப்பட்ட சமூக நிலைமையையே இவ்விலக்கியத்தின்மூலம் அறிய முடிகிறது. இலக்கணம் வகுத்த தொல்காப்பியமும் அதைனை நாடகீயமாக நிகழ்த்திக் காட்டிய சங்க இலக்கியங்களும் உடல் மற்றும் மொழிரீதியாகப் பெண்ணை ஒடுக்குவதன் மூலமாகக் கட்டுக்கோப்பான ஒருகணவர் முறையைச் சாத்தியப்படுத்தும் கருத்தாக்கத்திற்கு வலைமையைச் சேர்த் திருக்கின்றன. மேலதிகாமாக குலம் வர்க்கம் முதலானவையும் ஒடுக்கும் காரணிகளாக இருந்திருக்கின்றன.

"யாயும் ஞாயும் யாரோகியரோ, எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர், யானும் நீயும் எவ்வழியறிதும், செம்புலப் பெயல்நீர்போல, அன்புடை நெஞ்சம் தாங்கலந்தனவே" ***(1985:43)*** என்னும் குறுந்தொகையில் வருகிற பாடல் தொல்காப்பியம் முன்வைக்கிற படிநிலை அமைப்புக் கருத்தாக்கம் உண்டானபிறகு தோன்றிய பாடலாகவே இருக்கவேண்டும். தலைவனுக்கும் தலைவிக்கும் தன் இணையைத் தேர்வு செய்கிற உரிமை இருந்த தொல்பழங்காலத்தில் இத்தகைய சாதியக் கருத்தாக்கம் பற்றிய எண்ணமே எழுந்திருக்க வாய்ப்பில்லை. காதலின் பெருமையைப் பேசுகிற பாடலென்று புகழப்படுகிற இந்தப் பாடல் அக்கால சாதியப் படிநிலை அமைப்புக்கெதிரான கலகக் குரலாக வாசிக்கப்பட வேண்டியது. இத்தகைய எதிர்க்குரல்கள் மட்டுப்படுத்தப்பட்டு மைய நீரோட்டக் குரல்களின் தன்மை ஏற்றப்பட்டு நம்மிடம் வாசிக்கக் கொடுக்கப்பட்டதையே இவற்றுக்கான உரைகள் தெளிவுபடுத்து கின்றன. மேலும் ஔவையார் போல தனித்த சிந்தனைகொண்ட பெண்கள் வாழ்ந்த காலத்திற்குப் பிறகான காலத்தில் ஆண் சிந்திக்கிறவனாகவும் பெண் சிந்திக்கப்படுகிறவளாகவும் மாறிப்போனது

பெண்களின் புலமை வரலாற்றின் மீது நிகழ்த்தப்பட்ட மிகப்பெரிய சுரண்டலாக அமைந்தது. “வினையே ஆடவர்க்கு உயிரே வாள்நுதல், மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்” *(1985:126)* என்பதான கோட்பாடுகள் உருவாயின. இத்தகைய கோட்பாடுகளின் உருவாக்க வரலாற்றைச் சங்க காலக் குறுந்தொகை, சங்கம் மருவிய காலத் திருக்குறள் அதற்கும்பிறகு தோன்றிய மணிமேகலை ஆகியவற்றிலிருந்து சில உதாரணங்களை வரிசைப்படுத்துவதன் மூலம் புரிந்துகொள்ளலாம்.

“தானுழந்தட்ட தீம்புளிப் பாகர், இனிதெனக் கணவன் உண்டலின், நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே” *(1985:152)* என்கிறது குறுந்தொகை. “தெய்வம் தொழாஅள் கொழுனற் தொழுதிடுவாள்/பெய்யெனப் பெய்யும் மழை” *(1949:44)* என்கிறது திருக்குறள். “காதலர் இறப்பின் கனையெரி பொத்தி ஊதுலைக் குருகின் உயிர்த்தகத்து அடங்காது இன்னுயிர் ஈவர் ஈயா ராயின், நன்னீர்ப் பொய்கையின் நளியெரி புகுவர் நளியெரி புகாஅர் ஆயின் அன்பரோடு உடனுறை வாழ்க்கைக்கு நோற்றுடம் படுவர் பத்தினிப் பெண்டிர்”*(1898:18-19)* என்கிறது மணிமேகலை. இதனைக் கால வரிசைப்படுத்திக் கொண்டோமானால் தொல்காப்பியத்திற்கு முன்னதான தொல்பழங்காலத்தில் காதலியாகவும் தொல்காப்பிய சங்க இலக்கியக் காலங்களில் மணம் புரிந்த கணவனுக்கு மனைவி பணிவிடை செய்பவதான கருத்தாக்கத்தையும் திருவள்ளுவர் காலத்தில் கணவன் தெய்வநிலைக்கு உயர்த்தப்பட்ட கருத்தாக்கத்தையும் இரட்டைக் காப்பியக் காலங்களில் கணவன் தெய்வம் என்பதோடன்றி அவனன்றி மனைவிக்குத் தனி இருப்பு இல்லாதொழிந்த கருத்தாக்கநிலையையும் நிலையையும் வரலாற்றுரீதியாகப் புரிந்துகொள்ள முடியும்.

ஆண்கள் போர்க்களத்தில் தியாகம் செய்து உயிர் துறத்தலும் பெண்கள் கணவனுக்குப் பிரிதான வேறொரு தன்னிலையாகத் தன்னை உணராது கணவனது வாழ்வே தனது வாழ்வெனக் கொண்டு அவனது வம்ச விருத்திக்கும் குலப் பெருமைக்கும் வளம் சேர்ப்பதற்கென தன் வாழ்வை அர்ப்பணித்தலுமே இருபாலினருக்குமான தலையாயக் கடமைகள் என்பதான கருத்தாக்கத்தைத் தகவமைக்கவே நம் பண்டை இலக்கியங்கள் உதவி செய்கின்றன. இத்தகைய கடமைகளிலிருந்து மீறுவது குறித்த குற்றவுணர்ச்சியை உண்டாக்குவதன் மூலமாக வேறு யாரும் கண்காணிக்காத விடத்தும் ஒரு தனிநபர் தன்னைத்தானே கண்காணித்துக் கொள்ளக்கூடிய செயல்பாட்டையும் இவை உண்டுபண்ணுகின்றன. சட்டரீதியாக ஒழுங்கைக் கட்டமைப்பதைவிடவும் வலிமையானமுறை மனஅமைப்புரீதியாகக் கட்டமைப்பது. நமது குற்றவுணர்வை மேலோங்கச் செய்வதன்மூலம் நமது மனமே நம்மை விதியொழுங்குகளுக்குக் கட்டுப்பட வைக்கிறது. ஒடுக்குமுறைச் செயல்பாடுகளில் அதிகார அமைப்புகள் நிகழ்த்துகிற மாபெரும் சாகசம் இதுதான். பெண்களைக் கட்டுப்படுத்தி ஒருகணவர் மணமுறைக்குத் தகவமைத்ததில் மூலமுதன்மையாகப் பங்களித்திருப்பது இத்தகைய மன அமைப்பு ரீதியான ஒழுங்குபடுத்துதல் செயல்பாடுதான்.

குடும்ப அமைப்பு என்பது தன்னிச்சையானதல்ல. அதன்மீது மதம்,சாதி, வர்க்கம் முதலான பண்பாட்டுக் காரணிகள் ஆதிக்கம் செலுத்துவதாயிருக்கின்றன. இவற்றில் மிக முக்கியமானதாயிருப்பது மதமும் சாதியுமாகும். பெண் இலக்கிய வரலாற்றின் தொய்வுக்கு மதம் என்னும்

புறக்காரணி ஏதுவாயிருந்ததை விளக்கும் தாயம்மாள் அறவாணன் சமய வழி எளிதில் வயப்படும் தமிழரை வட இந்தியாவில் கால்கொண்ட சமண மதமும் பௌத்த மதமும் ஆரியர் பரப்பிய வைதீக மதமும் வாழ்வமைப்புரீதியாக மாற்றியதைக் குறிப்பிட்டு, சிலப்பதிகாரக் காலத்தில் பரத்தையர் கற்றோராய் இருக்க, குலமகளிர் கல்லாதோராய் இருந்திருக்க வேண்டும் என்னும் முடிவுக்கு வருகிறார் (2011:443-444).ஆனாலும் பரத்தையர் மட்டுமே கற்றோராய் இருந்திருக்க வேண்டுமென்னும் இடத்தில் கற்ற கல்வியை வெளிக்காட்டும் வாய்ப்பு பரத்தையருக்கு மட்டுமே இருக்க, குலமகளிருக்கு அது மறுக்கப்பட்டது என்று கொள்ளல் பொருத்தமானதாயிருக்கும்.

## முடிவுரை

குலமகளிர் கல்வியறிவு இல்லாதோர் என்பதைவிடவும் கற்ற கல்வியை வெளிக்காட்ட வாய்ப்பில்லாமல் முடக்கப்பட்டனர் என்பதையே பிந்தைய வரலாறுகள் காட்டுகின்றன. காரைக்காலம்மையார் “பிறந்து மொழி பயின்ற பின்னெலாம்” என்று அடியெடுத்துத்தன் இளமைக்கல்வி குறித்துப் பேசித்தான் அற்புதத் திருவந்தாதியைத் தொடங்குகிறார். மொழி பயிலுதலுக்கு மழலையாயிருக்கும்போது முதன்முதலாக மொழி பழகுதல் என்றர்த்தமுண்டு. அதேசமயம் அம்மையார் மொழிப் புலமையிலும் இசைப்புலமையிலும் விஞ்சும் திறமை படைத்தவராயிருந்ததையும் நாம் கணக்கில் கொள்ளவேண்டும். அவருக்குப் பிறகான காலத்தில் ஆண்டாள் நூற்றியெட்டுத் திருப்பதிகங்கள் குறித்துப் பெரியாழ்வாரிடம் பாடம் கேட்கிறார். இது ஒருநாள் நிகழ்வாக இருந்திருக்க வாய்ப்பில்லை. பெரியாழ்வாரே ஆண்டாளுக்குச் சிறுவயது முதலே ஆசானாயிருந்ததையே அது தெரிவிக்கிறது. மிகப் பிற்காலத்திலும்கூட அதிவீரராம பாண்டியரின் மனைவி முதலான பிற குலமகளிரும் புலமை சான்றவராக இருந்ததை இலக்கிய வரலாறுகள் எடுத்துரைக்கின்றன. எனவே குலமகளிர்க்குக் கல்வியில்லை என்று கிடைக்கோட்டு நிலையில் புரிந்துகொள்வதைவிடவும் ஆண்களை விஞ்சும் ஆளுமைகொண்ட பெண்களின் புலமை மரபு படிப்படியாக இருட்டடிப்பு செய்யப்பட்டு பின்பு மறுக்கப்பட்டது என்று வரலாற்றுரீதியாகப் புரிந்துகொள்வது பொருத்தமாயிருக்கும்.

## ஆய்வுத் துணை நூல்கள்

1. (1898) சாமிநாதையர் உ.வே. (பதிப்.), மணிமேகலை மூலமும் அரும்பத உரையும், வெ.நா.ஜூபிலி. அச்சுக் கூடம், 1898.
2. (1949) கோபாலகிருஷ்ணமா சாரியர் வை.மு. (பதிப்.), திருக்குறள் அறத்துப்பால் மூலமும் பரிமேலழகருரையும், வை.மு.கோபாலக்ருஷ்ணமாசாரியர் பதிப்பு, 1949 (மூன்றாம் பதிப்பு).
3. (1983) வெள்ளைவாரணர் க.,தொல்காப்பியம் கற்பியல் உரைவளம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், 1983.
4. (1985) சண்முகம் பிள்ளை மு. (பதிப்.), குறுந்தொகை மூலமும் உரையும், தமிழ்ப்பல்கலைக்கழகம், 1985.
5. (1990) எங்கெல்ஸ், குடும்பம் தனிச் சொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம், முன்னேற்றப் பதிப்பகம், 1990 (நான்காம் பதிப்பு).
6. (2011) தாயம்மாள் அறவாணன், மகடூஉ முன்னிலை: பெண் புலவர் களஞ்சியம் (ஆதிமந்தி முதல் ஆண்டாள் வரை), தமிழ்க்கோட்டம், 2011.